கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப்படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி, சம்மட்டிபுரம் பகுதி 68வது வார்டு பகுதியில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் பகுதி செயலாளர் தவமணி, மாவட்டத் துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் ஜெ.மூவேந்திரன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.கணேசன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் வீரகணேசன், வட்டப் பொறுப்பாளர் லோகநாதன், இளைஞர் அணி வெற்றிச்செல்வன், ஐயப்பன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

முதலமைச்சர் அவர்கள் சென்னை, தண்டையார்பேட்டை, கோபல் நகரில் நேற்று (12.08.2025) 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்தை காணொளி காட்சியின் வாயிலாக துவக்கி வைத்ததையொட்டி, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், வெந்நீர் வாய்க்கால் ஊராட்சியில் வளம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.பாஸ்ராஜாண்ணப்பன் உணவு;ெ பொருட்கள் வழங்கும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் சீத் சிங் காலோன , திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஜீனு ஆகியோர் உள்ளனர்.

"நான் முதல்வன்" திட்டத்தினால்தான் அகில இந்திய குடிமைப் பணி தேர்வில்

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணாக்கர்கள் பெரும்பாலானவர்கள் தேர்ச்சி!

அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பெருமிதம்!

சென்னை, ஆக. 13–

சென்னை, பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 262 மாணாக்கர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இப்பட்டமளிப்பு விழாவில் உயர் கல்வித்துறை அமைச்சர் பேசிய தாவது:–

சென்னையின் பல பகுதிகளில் கால்வாய் ஓரங்களில் சுகாதாரமின்றியும், பாதுகாப்பின்றியும் குடியிருந்தவர்களை எல்லாம் ஒருங்கிணைத்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில், சென்னைப் பெருநகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செம்மஞ்சேரியில் ஒரு நகரையே உருவாக்கி, அடுக்கு மாடி குடியிருப்பு வழங்கி பல ஆயிரம் ஏழை, எளிய மக்களுடைய பிள்ளைகள் உயர்கல்வி பெறவே இக்கல்லூரி தொடங்கப்பட்டது.

இக்கல்லூரி மாணாக்கர்களுக்கான தேவையை அறிந்த நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ. 4.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 12 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வக அறைகள் கட்டி முடிக்கப்பட்டு மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு 2022–23இல் திறக்கப்பட்டது. மேலும், பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 7.86 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, கல்லூரிக்கு இணைப்புக் கட்டிடப் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது.

மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் அவர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 2 கோடியும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் ரூ. 1 கோடியும் ஆகமொத்தம் ரூ. 3 கோடி நிதியில் செய்யப்பட்டு "கலைஞர் கலையரங்கம் கட்டி முடிக்கப்பட்டு மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த பட்டமளிப்பு விழாவில் 255 மாணாக்கர்கள் இளநிலை பட்டத்தினையும், 7 மாணாக்கர்கள் முதுநிலை பட்டத்தினையும், என ஆக மொத்தம் 262 மாணாக்கர்கள் பட்டம் பெறுகின்றனர். இதில் 191 மாணாக்கர்கள் முதல் தலைமுறை பட்டதாரிகள். இத்தகைய பின்புலம் இருக்கும் மாணாக்கர்கள் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று இருப்பது மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் பெண்கள் உயர்கல்வி பெற "புதுமைப்பெண்" போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். இதுவரை இத்திட்டத்தின் கீழ் சுமார் 7 இலட்சம் மாண

வியர்கள் பயன் பெற்றுள்ளனர். அதுபோல், மாணாக்கர்கள் படித்து முடித்தவுடன் வேலைவாய்ப்பினைப் பெறவும் தொழில் முனைவோராக திகழவும் நமது முதலமைச்சர் அவர்கள் தனது பிறந்தநாளில் (1.3.2022) "நான் முதல்வன்" என்ற முத்தான திட்டத்தினை வழங்கினார்கள். இதன் மூலம் மாணாக்கர்கள் படிக்கும் போதே திறன்களை வளர்த்திட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் வருடத்திற்கு ரூ. 10 இலட்சம் மாணாக்கர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்படும் என்ற இலக்குடன் தொடங்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 41 இலட்சம் மாணாக்கர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. இதனால் முன் எப்போதும் இல்லாத அளவில் IAS, IPS போன்ற அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெறும் நமது தமிழ்நாடு மாணாக்கர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதே இதற்கு சாட்சியாகும். மேலும், மாணவர்களுக்காக "தமிழ்புதல்வன் திட்டம் 2024ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மாதந்தோறும் ரூ. 1,000 வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களின் பயனாக தான் இந்தியாவிலேயே உயர்கல்வியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கின்றது. இதுமட்டமில்லாமல் இந்தியாவிலேயே முனைவர் ஆராய்ச்சி பட்டம் பெற்றவர்கள் தமிழ்நாட்டில் தான் அதிகம்.

ஒரு சாரார்களுக்கு மட்டுமே உடமையாக இருந்த கல்வியை நீதிக் கட்சியும், திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கடுமையாகப் போராடிப் பெற்ற சமூகநீதி சார்ந்த 'இட ஒதுக்கீடு' கோட்பாட்டின் வெற்றி தான் இது. எந்த சமூகத்தை படிக்கக் கூடாது என்றார்களோ அந்த சமூகத்தை சார்ந்த எளியவனாகிய என்னை உயர்கல்வி அமைச்சராக்கி அழகு பார்த்தவர் நமது முதலமைச்சர் தளபதி அவர்கள்.

மாணாக்கர்கள் அரசின் "நான் முதல்வன் போன்ற திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 'நான் முதல்வன்' திட்டம் மாணாக்கர்களுக்கு எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தரும். அதைத் தான் நம் முதல்வர் மாணாக்கர்களிடம் விதைத்திட அறிவுறுத்தியுள்ளார்.

இன்று பட்டங்களை பெறும் மாணாக்கர்களாகிய நீங்கள் இது வரை ஒரு மாணவர் என்ற நிலையில் படிக்கும் இடம் சார்ந்தும் உங்களின் பெற்றோரைச் சார்ந்தும் இருந்திருப்பீர்கள். ஆனால், இன்று முதல் உங்கள் ஒவ்வொருவரையும் தனித் தனி மனிதராக இந்தச் சமூகம் பார்க்கப் போகின்றது. மாணாக்கர்கள் தங்களின் பெற்றோர்களுக்கு என்றும் நன்றி கடனாய் இருக்க வேண்டும் எனவும், நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.

இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் ஆ.உமாமகேஸ்வரி, பேராசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் கண்காணிப்பிலுள்ள NAAC மூலம்

கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தரச்சான்றிதழ்களில் முறைகேடுகள் நடைபெறுகிறதா?

நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக 13–

தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை (NAAC), இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களை மதிப்பிட்டு தரவரிசைப் படுத்தும் பணியை பணியை செய்து வருகிறது. அந்த வகையில் பல கல்வி நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களுக்கு உயர் தரச்சான்று பெறுவதற்காக முறைகேடுகளில் ஈடுபடுவதாக வந்த செய்திகளின் அடிப்படையில், கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் ஒன்றிய கல்வித் துறை அமைச்சகத்திடம் NAAC தரச்சான்றிதழ் வழங்குவதில் முறைகேடுகள் நடந்துள்ளனவா? மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், உயர் கல்வி நிறுவனங்களின் தரச்சான்றிதழுக்கான மதிப்பீட்டில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளை வினவியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :-

தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை (NAAC) மூலம்

பல கல்வி நிறுவனங்கள் தங்களுக்கு உயர் தரச்சான்று பெறுவதற்கு முறைகேடுகள் செய்ததாக புகார்கள் வந்துள்ளனவா? மேலும், NAAC-லிருந்து சுமார் 20% மதிப்பீட்டாளர்கள் நீக்கப்பட்டுள்ளனரா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் தரவரிசை பெறத் தவறிய கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த மூன்று ஆண்டுகளில் தரவரிசை பெறத் தவறிய கல்வி நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை, ஆண்டு வாரியாக எவ்வளவு?

மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், உயர்கல்வி நிறுவனங்களின் மதிப்பீட்டில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும் அரசு எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

தரவரிசை முறை மற்றும் சான்றுரை அடிப்படையிலான மதிப்பீடுகளை அதிகம் சார்ந்திருப்பதால் ஏற்படும் பாதிப்புகளை, குறிப்பாக மனிதவியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளில், அரசு ஆய்வு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

மதிப்பெண் அடிப்படையிலான மதிப்பீடுகளுக்கு பதிலாக, சக மதிப்பாய்வு செய்யப்பட்ட, சூழல் உணர்திறன் மற்றும் துறை சார்ந்த மதிப்பீட்டு முறைகளை அறிமுகப்படுத்த அரசு திட்டமிடுகிறதா?

உயர்கல்விக்கான பொது நிதியை அதிகரிக்கவும், மானியங்கள், ஒப்புதல்கள் மற்றும் அங்கீகாரத்திற்கான தரவரிசையில், ஒழுங்குமுறை ஆணையத்தின் சார்புநிலையைக் குறைக்கவும் ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அது எப்போது நடைமுறைக்கு வரும்? இல்லையெனில், அதற்கான காரணங்கள் என்ன?

மாநிலக் கல்விக் கொள்கையை விளக்கி துண்டுப் பிரசுரங்கள் வழங்கல்!

11-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து - மாணவர்களுக்கு முதல்வர் கொடுத்த பரிசு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கை!

சென்னை, ஆக.13–

சமத்துவம் மலரச் செய்யும் ஆயுதம் மாநிலக் கல்விக்கொள்கை என்றும், 8–ஆம் வகுப்பு வரை அனைவரும் தேர்ச்சி, 11–ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து செய்யப்படும் என்பதை மாநிலக் கல்விக் கொள்கையில் சேர்த்து வெளியிட்டிருப்பது இலட்சக் கணக்கான மாணவர்களுக்கும் அவர் தம் பெற்றோர்களுக்கும் நம் முதல்வர் கொடுத்த பரிசு என்று தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை, அதனால் தான் தமிழ்நாட்டின் கடைக்கோடி மனிதனுக்கும் கல்வி சென்றுசேர வேண்டுமெனத் திராவிட இயக்கத் தலைவர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அதைப் பொறுக்க முடியாத சனாதன ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் அமைப்புகள் அதன் அடியாளாகச் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மூலம் கல்வியைக் குறிப்பிட்ட சமூகத்துக்கு மட்டுமே என்றாக்கி ஏழை எளிய மக்களுக்குக் கல்வியை எட்டாக்கனியாக்கும் வகையில் தேசிய கல்விக் கொள்கை எனும் மக்கள் விரோதக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.

சமூகத்திக்கு எதிரான தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்போது அறிமுகம் செய்ததோ அப்போதிலிருந்து இப்போது வரை அதன் தீமைகளைச் சுட்டிக்காட்டி அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதோடு அதற்கு மாற்றாக மாநிலக் கல்விக் கொள்கையை உருவாக்க' டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி முருகேசன் தலைமையில் 14 பேர் கொண்ட குழ ஒன்றையும் அமைத்து இந்தியாவின் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் என்பதை மீண்டும் நிரூபித்து இருக்கிறார் திராவிட நாயகர் தமிழக முதலமைச்சர் அவர்கள் தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் மத வெறுப்பை போதித்து, மத மேலாண்மைகளையும் புராண இதிகாசப் புரட்டுகளையும் கல்வி எனும் பெயரில் காவி கொள்கையை புகுத்த நினைக்கும் ஒன்றிய அரசுக்குத் தக்க பாடம் புகட்டும் வகையிலும் சாதியைத் தூக்கிப் பிடிக்காத சமத்துவத்தைப் போற்றும் வகையிலும் தமிழ்நாட்டு மாணவர்களின் நலனையும் எதிர்காலத்தையும் கருத்தில்கொண்டு மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு

8ஆம் வகுப்பு வரை அனைவரும் பாஸ்!

11ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு ரத்து!

10, 11, 12 என தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் பொதுத்தேர்வுக்கு தயாராகும்போது மாணவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்கும் ஆளாகினர். எனவே, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் 11ஆம் வகுப்புப் பொதுத் தேர்வை ரத்து செய்ய வேண்டும் எனத் தொடர்ச்சியாக வைத்த கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வு ரத்து செய்யப்படும் என்பதை மாநிலக் கொள்கையில் சேர்த்து வெளியிட்டிருப்பது இலட்சக்கணக்கான மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் நம் முதல்வர் கொடுத்த பரிசு.

3ஆம் வகுப்பு 5ஆம் வகுப்பு 5ஆம் வகுப்பு எனத் தொடர்ச்சியாக மாணவர்களைத் தேர்வு எனும். சோதனைக் கூடத்தில் வைத்து அவர்களின் கல்வி சுற்கும் கனவைச் சிதைத்து தேர்வி தோற்பவர்களைக் குலக் கல்வி எனும் மோசடி வலையில் சிக்க வைக்க முயன்ற தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக 1 முதல் 8ம் வகுப்பு வரை ஆல் பாஸ் என அறிவித்திருப்பது ஆகச் சிறந்த செயல் திட்டம்.

கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட இந்த ஆல் பாஸ் திட்டம் என்பது எல்லோருக்கும் எல்லாம் என எப்போதும் மக்கள் நலனை யோசிக்கும் தம் முதல்வரின் இந்தச் செயல்திட்டம் இடைநிற்றலைக் குறைக்கும் அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களின் இடைநிற்றலை முற்றிலுமாகக் குறைக்கும் அருமருந்து

மும்மொழிக் கொள்கைக்கு சவுக்கடி; இருமொழிக் கொள்கையில் உறுதி!'

ஒன்றிய அரசு மும்மொழி கொள்கையை நாடு முழுவதும் திணிக்க முயலும் நிலையில் படிக்கத் தாய்மொழி தமிழும், உலகத்தை தொடர்புகொள்ள இணைப்பு மொழியாக ஆங்கிலமும் இருக்கும் என பேரறிஞர் அண்ணா வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் காப்பாற்றிய இருமொழி கொள்கையில்தான் தமிழ்நாடு எப்போதும் இருக்கும் என உறுதிபடத் தெரிவித்திருப்பது இந்தியைத் திணித்து இந்திய ஒன்றியத்தின் பன்மொழித் தத்துவத்தைச் சிதைக்கத் துடிக்கும் ஒன்றிய அரசுக்கு முதல்வர் அவர்கள் கொடுத்த சவுக்கடி

பெண்கல்விக்கு முக்கியத்துவம் இடைநிற்றலை முற்றும் முழுதாக அழித்தல்!

தற்போது மாவட்டம் தோறும் மாதிரிப் பள்ளிகள் செயல்பட்டு வரும் நிலையில் இனி வட்டார அளவில் மாதிரிப் பள்ளிகள் வெற்றிப் பள்ளிகள் என்ற பெயரில் செயல்படுத்தப்படும் என்பதும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, காலத்தின் தேவைக்கு ஏற்ப புதிய பாடத்திட்டம் உருவாக்கி அளிக்கப்படும் எனவும் தெரிவித்திருப்பது மாணவர்களின் மீதான முதலமைச்சரின் அக்கறையைக் காட்டுகிறது.

இது தவிர பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு ஏதுவான கற்றல் சூழலை உருவாக்கியிருப்பதோடு ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி மலைவாழ் மாணவர்கள், மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கல்வியில் தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்குச் சிறப்பு கல்வி கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதும் மனதாரப் பாராட்டத் தக்கவை.

தமிழ்நாடு எப்போதும் இந்தியாவிற்கு முன்னுதாரணமான மாநிலம் என்பதை மாநில கல்விக் கொள்கையின் மூலம் நம்முடைய திராவிட நாயகர் மீண்டும் ஒருமுறை திரூபித்துள்ளார். நம்முடைய கல்விக் கொள்கையைப் பின்பற்றி இனி மற்ற மாநிலங்கள் அவர்களுக்கென பிரத்தியேக கல்விக் கொள்கையை உருவாக்குவார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

மோசமான சூழலில் சிக்கியுள்ள கல்வியைப் பொதுப்பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அனைத்தையும் சாத்தியப்படுத்தி வரும் நம் சாதனை நாயகர் இதிலும் சரித்திரம் படைப்பார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரும் தமிழக முதல்வரின் நடவடிக்கைக்கு மக்கள் களத்திலும், போராட்டக் களத்திலும் மாணவர் அணி உறுதுணையாக நிற்கும்

தேசியக் கல்விக் கொள்கை எனும் ஒன்றிய அரசின் நயவஞ்சகத்துக்குப் பதிலடியாக மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டுள்ள திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கும் உற்றதுணையாக இருந்த கழக இளந்தலைவர் அவர்களுக்கும் அதைச் செயல்படுத்திய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் மாணவர் அணி சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம். \

கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள மாநிலக் கல்விக் கொள்கையை கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள், துண்டுபிரசுரங்கள், போஸ்டர்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் மாணவர் அணி கொண்டு சேர்க்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்

இவ்வாறு மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் ரெட்டணை அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் பள்ளி மாணவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் போதைப்பொருள் தடுப்பு உறுதி மொழியை எடுத்துக்கொண்டனர். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், மாவட்ட கல்வி அலுவலர் சிவசுப்பிரமணியன், ஒன்றியச் செயலாளர் மணிமாறன், தலைமை ஆசிரியர் கலையரசன் உள்ளிட்ட ஊராட்சி மன்ற பிரதிநிதிகள் மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்

மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா!

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தொடங்கி வைக்கிறார்!

திருவண்ணாமலை, ஆக. 13–

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர் நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டு வருகிறது. பொதுப் பணித்துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு வளைகாப்பு விழாவை தொடங்கி வைத்தார். இம்மாத வளைகாப்பினை சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தொடங்கி வைக்கிறார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலுவை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

16.08.2025 சனிக்கிழமை காலை 9.30மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை அமைப்பு சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டி.குணசிங் தலைமை வகிக்கிறார் .அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.குமரன் முன்னிலை வகிக்கின்றார்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

விழாவில் கலந்து கொண்டு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கர்ப்பிணிப் பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார்.

விழாவில் 39 ஆவது வார்டு தூய்மை அருணை ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி ஒருங்கிணைப்பாளர்களும், தூய்மைக் காவலர்களும் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக மேற்பார்வையாளர் இல.குணசேகரன் நன்றி கூறுகின்றார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞரணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுக கூட்டம் சத்தியா மகாலில் மீன் வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர்கள் கே.கே. ஆர்.ஜெயக்கொடி, ஏ.பி.சதிஷ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தங்கதுரைப் பாண்டியன், மணல்மேடு சுதாகர், ஸ்ரீ வைகுண்டம் இளைஞரணி சார்பாக ஆர்.லக்ஷ்மணன் மீன் வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவருக்கு வீரவேல் வழங்கினார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.